is concerned, why not this Government press the Central Government to take in our representatives in the Steel Advisory Council especially when we are not producing steel?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநிலத்தினுடைய தேவையின் மொத்த அளவு எவ்வளவு என்று சொல்வதற்கு அரசாங்கத்தினால் முடியாது என்று சொன்னார்கள். 'இன்கேபபிள்' என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக கேள்வி கேட்டு பதில் தெரிந்து கொண்டதற்குப் பின்னால், அவர்கள் அப்படி சொல்லியிருந்தால் அவருடைய திறமையைப் போற்றியிருக்கலாம். கேள்வி கேட்பதற்கு முன்னால், அந்தத் தகவல் என்னிடம் இல்லை என்று சொன்னதற்குப் பின்னாலே 'இன்கேபபிள்' என்று சொல்வது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு பொருத்தமுடையதாக இருக்காது நம்முடைய மாநிலத்தில் இரும்புப் பொருள்களின் தேவை அதிகமாக மிகுந்துவருகிறது என்ற கருத்தை அவர்கள் சொன்னதுபற்றிப் பாராட்டுகிறேன். அந்த அளவுக்கு நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்பதை அவர்கள் மறைமுகமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசின் சார்பிலே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்தவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே நான் அப்படி வற்புறுத்திவருவதாகச் சொன்ன பதிலைக்கூட கேட்காமல் அவர்கள் கேள்வி கேட்டுவிட்டார்கள் என்று வருந்துகிறேன்.

நாசரேத் கூட்டுறவு நூற்பாலையில் தீ விபத்து

*441 வின.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாசரேத் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1969-ம் ஆண்டு, ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனின், விபத்தால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விபத்தால் ஏற்பட்ட இழப்பு பின் வருமாறு :

பஞ்சு அழிவினால் இழப்பு சுமார் ரூ. 78,000.

கட்டடம், மற்றும் இதர அழிவினால் இழப்பு சுமார் ரூ 29,000.

முற்பகல் 9-30 திரு. எஸ். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த தீ விபத்துக்குக் காரணம் என்ன? இந்த இழப்பு முழுவதற்கும் இன்ஷூரன்ஸ் கம்பெனியிலிருந்து நஷ்ட ஈடு வழங்கப்பட்டதா ? இந்தமாதிரி இனி நடை பெறாமல் இருக்கச் சிறப்பு ஏற்பாடு என்ன செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : Electrical spark in the tube plate fitting— அதன் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Director of Handlooms and Textiles has since reported that the Fire and General Insurance Society has sanctioned a sum of Rs. 86,065 towards the settlement of the claim preferred by the Tiruchendur Co-operative Spinning Mills.

நமக்கு அதிக நஷ்டம் எதுவும் இல்லை.